தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

கார்த்திகை 7, தாரண-திருவள்ளுவர் ஆண்டு 2035
2004 நவம்பர் 22, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள், விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விடைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (பட்டியல்கள் 11 மற்றும் 12) @

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8, 9, 10 மற்றும் 13) @ @

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

ஜவ்வாது மலையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்கள் வெட்டி கடத்திச் சென்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

@ 263 முதல் 485 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@ 486 முதல் 689 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[பேரவைத் தலைவர்] [2004 நவம்பர் 22

வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, காவலூர் என்ற இடத்தில் ஜவ்வாது மலையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்களை வெட்டிக் கடத்திச் சென்றுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

01-08-2004 அன்று அதிகாலையில் 30 நபர்களைக் கொண்ட கும்பல் ஒன்று, காவலூர் வான்வெளி ஆராய்ச்சி நிலைய வளாகத்திற்குள் புகுந்து அங்கிருந்த நான்கு சந்தன மரங்களை வெட்டியபின் 3 சந்தன மரங்களைக் கடத்திச் சென்று விட்டனர். அதன் பின்னர், ஒரு சந்தன மரத்தை வனப் பணியாளர்கள் மீட்டுள்ளனர். கடத்தப்பட்ட 3 சந்தன மரங்களின் எடை சுமார் 153 கிலோ இருக்கும். அதன் மதிப்பு ரூ.1,50,000/-க்கும் குறைவே ஆகும்.

மீண்டும் 19-10-2004 அன்று மேற்கண்ட எண்ணிக்கையிலான கடத்தல் கும்பல் மேற்கண்ட வளாகத்தில் 16 சந்தன மரங்களை வெட்டி எடுத்துச் சென்றனர். வனப் பணியாளர்களின் தீவிர தேடுதல் வேட்டையின் பயனாக மேற்கண்ட 16 சந்தன மரங்களும் மீட்கப்பட்டு விட்டன. மேற்கண்ட 16 பச்சை சந்தன மரங்களின் எடை சுமார் 3 மெட்ரிக் டன் இருக்கும். இதன் மதிப்பு சுமார் ரூ.30 இலட்சம் ஆகும். இவை அனைத்தும் திரும்ப கைப்பற்றப்பட்டுவிட்டதால், அரசுக்கு எவ்வித இழப்பும் இல்லை.

இந்நிகழ்வுகளின் விளைவாக அங்கிருக்கும் 32 முதிர்ந்த உலர்ந்த சந்தன மரங்களை களைந்தெடுத்து, அதில் கிடைக்கும் சுமார் 16 டன் எடையுள்ள சந்தன மரங்களை நடைமுறையிலுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கிற்குக் கொண்டு சென்று ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.1 கோடி ஆகும்.

2004 நவம்பர் 22] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

மேற்படி கடத்தல் நிகழ்வுகளைத் தொடர்ந்து, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, மூன்று தனிப் படைகள் அமைக்கப்பட்டு, திறம்பட செயல்பட்டு வருகின்றன. மேலும் மோப்ப நாய் படை ஒன்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஜவ்வாது மலைப் பகுதி முழுமையும் குறிப்பாக வான்வெளி நிலைய வளாகமும் இரவு ரோந்துப் பணி, இதர தணிக்கைப் பணிகள் போன்ற நடவடிக்கைகளின் மூலம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டு சந்தன மரத் திருட்டு வெட்டுகள் குறித்து இரண்டு வழக்குகள் திருப்பத்தூர் கோட்டத்தில் வழக்கு எண் STOR No. 5/2004, நாள் 1-8-2004 மற்றும் STOR No. 6/2004 நாள், 19-10-2004-ல் பதிவு செய்யப்பட்டு வழக்குகளின்மீது விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு வனச் சட்டம், 1882-ன்கீழ் சந்தன மரம் அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்களுள் (Scheduled Timber) ஒன்றாகும். மேற்படி சட்டத்தின் பிரிவு 56-சி-ன்படி அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் தொடர்புடைய எந்தவொரு குற்றமும் பிடி ஆணையின்றி கைது செய்வதற்குரிய குற்றமாகக் கருதப்படும்.

இதற்கிடையில் வனத் துறை எடுத்த தொடர் நடவடிக்கையினால் இதுவரை 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற குற்றவாளிகள் தலைமறைவாக உள்ளதால் அவர்களையும் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். எங்களுடைய மாவட்டத்தில் ஜவ்வாது மலைதான் உலகிலேயே விலை உயர்ந்த சந்தன மரம் கிடைக்கக் கூடிய ஓர் இடம். இந்த சந்தன மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு, கடத்தப்பட்டு--காட்டிலே ஒருசில இடங்களில்தான் சந்தன மரங்களே இருந்து கொண்டிருக்கின்றன. அதிலே வீரப்பனை சுட்டு வீழ்த்திவிட்டாலும்கூட இன்னும் சில குட்டி வீரப்பன்கள் ஆங்காங்கே இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இருக்கக்கூடிய சந்தன மரங்களையும் அவர்கள் வெட்டி கடத்திக் கொண்டு போய்கொண்டிருக்கிறார்கள். வீரப்பனை சுட்ட அதே நாளிலேயே, 19-10-2004 அன்று, வாணியம்பாடி தாலுகா இந்த காவலூரில் ஆசியாவிலேயே மிகப் பெரிய Telescope—நம்முடைய மறைந்த

[திரு. சி. ஞானசேகரன்] [2004 நவம்பர் 22

மாண்புமிகு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட Telescope இருக்கக்கூடிய இடம் அந்தக் காவலூர் இடம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியா, அறிக்கையா?

திரு. சி. ஞானசேகரன்: இல்லை, இல்லை, கேள்விதான். அந்த Telescope இருக்கக்கூடிய அந்த இடத்தில் சுமார் ஒரு 168 ஏக்கர் இடத்தை—நம்முடைய வருவாய்த் துறையும், வனத் துறையும்—மத்திய அரசிற்கு கோள்களை ஆய்வு செய்வதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வளர்ந்திருக்கிற மரங்களை ஏற்கெனவே 1-8-2004 அன்று ஒரு கும்பல் — 30 பேர் கொண்ட கும்பல் — கடத்தினார்கள். அதேபோல் மீண்டும் 19-10-2004 அன்று ஒரு கும்பல் இந்த சந்தன கட்டைகளைக் கடத்தி சுமார் 1 கோடி ரூபாய் இழப்பை நம்முடைய வனத் துறைக்கும் அரசுக்கும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அறிக்கையிலே பார்க்கிறபோது, இந்த வனத் துறையைச் சேர்ந்திருக்கக்கூடிய அலுவலர்கள் சுமார் 1 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்த சந்தன மரங்களை எல்லாம் மீட்டு மீண்டும் மிச்ச மீதியிருந்த மரங்களைக்கூட இனி அவர்கள் வெட்ட முடியாதபடி இவர்களே வெட்டி அதைக் கொண்டு போய் தங்களுடைய கிடங்கிற்குள் வைத்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இந்த சந்தன மரங்கள் இப்போது நிறைய வளர்ந்து வருகின்றன; சிறிய சிறிய சந்தன மரங்கள், என்னுடைய நிலம் பக்கத்திலே இருக்கின்றன. அங்கிருந்து ஆறு மரங்களைக்கூட வெட்டி எடுத்துக் கொண்டுபோய் விட்டார்கள். ஆகவே, இனி சந்தன மரங்களை வளர்த்தாலும் பாதுகாப்பில்லை. இனி அரசே இதற்கு ஏ.கே. 47 போன்ற நல்ல சக்தி வாய்ந்த சில துப்பாக்கிகளை வனத் துறை அலுவலர்களிடம் வழங்கலாம். அதிரடிப் படையைக்கூட நீங்கள் இதற்கு வனத் துறையிலே நியமிக்கலாம், இப்படி வனத் துறையின் மூலமாக அதிரடிப் படைகளை நியமித்து, இனி இருக்கக்கூடிய சந்தன மரங்களைக் காப்பாற்றி, மீண்டும் ஜவ்வாது மலையில் விலை உயர்ந்த அந்தச் சந்தன மரங்களை, உலகப் புகழ் பெற்ற சந்தன மரங்களை வளர்ப்பதற்கு, காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டப்பட்டு கடத்தப்பட்ட சந்தன மரங்கள் அனைத்தும் மீட்கப்பட்டு விட்டன. அதில் ஈடுபட்ட 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2004 நவம்பர் 22]   [திரு. ஆர். வைத்திலிங்கம்]

சொன்னார்கள். புகழ்பெற்ற வான்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு வனத் துறையிலிருந்து 100 ஏக்கர், அதாவது 40 ஹெக்டேர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னது போல 168 ஹெக்டேர் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) அவரே சொன்னார். 20 ஆண்டு காலம் அச்சுறுத்திக் கொண்டிருந்த சந்தன மரக் கொள்ளைக்காரன், பல உயிர்களைக் கொன்றவன், வீரப்பனையே அடக்கிவிட்டோம். இதுபோல் சிறு சிறு தவறுகளையும் அடக்கிவிடுவார் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தன மரங்களை நாங்கள் காப்பாற்றுவோம் என்று உறுதி கூறி அமர்கின்றேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடு) நான்கு கேள்விகளையும் ஒன்றாகக் கேட்டுவிட்டீர்கள்; உட்காருங்கள். திரு. கே.என். இலட்சுமணன்.

முற்பகல் 10-05

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்தேழாவது முதல் இருநூற்று ஐம்பத்து ஒன்றாவது வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் திருநாட்டினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதிமூன்றாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.